# அன்புள்ள பணியமர்த்துபவரே

பணியாளர் இறக்க நேரிட்டால், 2015 இன் 68 ஆம் எண் வீட்டுப் பணியாளர் சட்டம் ஆர்ட்டிகிள் 22 பாரா 5 இன்படி, அவர் இறந்த மாதத்துக்கான சம்பளத்துடன் அவருடைய உடலை அவருடைய நாட்டுக்கு அனுப்ப பணியமர்த்துபவர் கடமைப்பட்டிருக்கிறார்.

الهيئة العامة للقوى العاملة
Public Authority of Manpower
MANPOWERKWT

# அன்புள்ள பணியமர்த்துபவரே

ரகசியப் பாதுகாப்பு மற்றும் வேலை செய்யும் இடத்துக்கான பிரைவசி இவற்றுக்கு இசைந்த விதத்திலும், பொது ஒழுக்கத்துக்கு மாறாக இல்லாத விதத்திலும் தனக்கு ஒரு ஃபோன் வைத்திருக்கவும், தன் வேலை நேரத்துக்கு வெளியே அதைப் பயன்படுத்தவும் வீட்டுப் பணியாளருக்கு உரிமை உண்டு.

الهيئـة العامـة للقـوى العاملـة
Public Authority of Manpower

MANPOWERKWT

# அன்புள்ள பணியமர்த்துபவரே

விட்டுப் பணியாளருக்கு குவைத் நாட்டுக்கு வெளியே பணி அளிக்கப்படக் கூடாது. இது நிரூபிக்கப்பட்டால், மாடல் பணியமர்த்தல் ஒப்பந்தம் பகுதி V, பணியமர்த்துபவரின் கடமைகள் பாரா 9 இன்படி, அவருடைய சம்மதம் இன்றி, வீட்டுப் பணியாளர், அவருடைய நாட்டுக்கு, பணியமர்த்துபவரின் செலவில் திருப்பி அனுப்பப்படுவார்.

# அன்புள்ள பணியமர்த்துபவரே

ஒப்புக் கொள்ளப்பட்ட தேதிகளில் சம்பளம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டால், 2015 இன் 68 ஆம் எண் வீட்டுப் பணியாளர் சட்டம் ஆர்ட்டிகிள் 27 இன்படி, சரியான நேரத்தில் சம்பளம் பெறாத ஒவ்வொரு மாதத்துக்கும் 10 டினார்கள் பெற வீட்டுப் பணியாளர் உரிமை பெறுகிறார்.

الهيئة العامة للقوى العاملة
Public Authority of Manpower

MANPOWERKWT

# அன்புள்ள பணியமர்த்துபவரே

வேலைநேரம் ஒருநாளைக்கு ஐந்து மணி நேரத்துக்கு மேற்படாமலும், அதைத் தொடர்ந்து ஒரு மணி நேரத்துக்குக் குறையாத ஓய்வெடுக்கும் நேரமும் இருந்தால், வீட்டுப் பணியாளருக்கு ஒரு நாளைக்கு 12 மணி நேரத்துக்கு மேல் பணி வழங்கக் கூடாது. 2015 இன் 68 ஆம் எண் வீட்டுப் பணியாளர் சட்டம் ஆர்ட்டிகிள் 22 பாரா 2 மற்றும்  மாடல் பணியமர்த்தல் ஒப்பந்தம் பகுதி ஏழு, பொதுவான விதிகள், பாரா 3 இன் படி, வீட்டுப் பணியாளருக்கு தொடர்ச்சியான 8 மணி நேரத்துக்கு இரவு ஓய்வு பெற உரிமை உண்டு.

الهيئة العامة للقوى العاملة
Public Authority of Manpower

MANPOWERKWT


அன்புள்ள
பணியமர்த்துபவரே
2015 இன் 68 ஆம் எண் வீட்டுப் பணியாளர் சட்டத்தின்படி, வீட்டுப் பணியாளருக்கு, சம்பளத்துடன் கூடிய வார ஓய்வுக்கு உரிமை உண்டு..
الهيئة العامة للقوى العاملة
Public Authority of Manpower
MANPOWERKWT

# அன்புள்ள பணியமர்த்துபவரே

இன் 68 ஆம் எண் வீட்டுப் பணியாளர் சட்டம் ஆர்ட்டிகிள் 22 பாரா 3 இன் படி, வீட்டுப் பணியாளருக்கு சம்பளத்துடன் கூடிய வருடாந்தர விடுமுறை பெற உரிமை உண்டு.

الهيئة العامة للقوى العاملة
Public Authority of Manpower

MANPOWERKWT

# அன்புள்ள பணியமர்த்துபவரே

வீட்டுப் பணியாளரின் பாஸ்போர்ட் அவருடைய தனிப்பட்ட ஆவணம். அதை வைத்துக் கொள்ள அவருக்கு உரிமை உண்டு. 2015 இன் 68 ஆம் எண் வீட்டுப் பணியாளர் சட்டம் ஆர்ட்டிகிள் 22 பாரா 4 இன் படி, பணியமர்த்துபவர் வீட்டுப் பணியாளரிடமிருந்து அவருடைய பாஸ்போர்ட்டைப் பறிமுதல் செய்து, அவர் அதை வைத்துக் கொள்வதை அவர் சம்மதம் இன்றித் தடுக்கக் கூடாது .

الهيئة العامة للقوى العاملة
Public Authority of Manpower

MANPOWERKWT

# அன்புள்ள பணியமர்த்துபவரே

2015 இன் 68 ஆம் எண் வீட்டுப் பணியாளர் சட்டம் ஆர்ட்டிகிள் 23 இன் படி, ஒப்பந்தக் காலத்தை முடித்த பின், ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒரு மாத சம்பளத்துக்குச் சம்மான சேவை-முடிவு-கிராசுவிடி பெற வீட்டுப் பணியாளருக்கு உரிமை உண்டு.

# அன்புள்ள பணியமர்த்துபவரே

ஸ்டாண்டார்ட் பணியமர்த்தல் ஒப்பந்தம் பகுதி 7 - பொதுவான விதிகள், பாரா 9 இன் படி, வீட்டுப் பணியாளர் ஒப்பந்தக் காலம் அல்லது எந்த ஒரு புதுப்பிக்கப்பட்ட காலத்துக்குப் பிறகு அவருடைய சொந்த நாட்டுக்குப் பயணிக்கும்போது, அவருடைய எகானமி வகுப்பு பயணக் கட்டணத்தைச் செலுத்த பணியமர்த்துபவர் கடமைப்பட்டிருக்கிறார்.

الهيئة العامة للقوى العاملة
Public Authority of Manpower

MANPOWERKWT

# அன்புள்ள பணியமர்த்துபவரே மற்றும் வீட்டுப் பணியாளரே

இரு தரப்புக்கும் இடையே எழும் தகராறுகள், 2015 இன் எண் 68 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குமுறைகளின்படி, வீட்டுப் பணியாளர்கள் பணியமர்த்தலை ஒழுங்குபடுத்துவதற்கான துறையின் அதிகார வரம்புக்குள் இருக்கின்றன.

الهيئة العامة للقوى العاملة
Public Authority of Manpower

MANPOWERKWT



# அன்புள்ள பணியமர்த்துபவரே

மனித வளங்களுக்கான பொது அதிகார அமைப்பால் தயாரிக்கப்பட்ட மாதிரி பணி ஒப்பந்தம் உங்களுக்கும், உங்கள் வீட்டுப் பணியாளருக்கும் சட்டப் பாதுகாப்பை உறுதி செய்யும் ஒரு அதிகாரபூர்வமான ஆவணம்.

الهيئة العامة للقوى العاملة
Public Authority of Manpower

MANPOWERKWT

# அன்புள்ள பணியமர்த்துபவரே

ஆங்கிலம் அராபிக் இரண்டிலும் எழுதப்பட்டிருக்கும் 2015 ஆம் ஆண்டுக்கான வீட்டுப் பணியாளர் சட்டம் எண் 68 இன் ஆர்ட்டிகிள் 18 இன் படி, வீட்டுப் பணியாளர்கள் பணியமர்த்தல் ஒழுங்குமுறைப்படுத்தல் துறையால் அளிக்கப்பட்டுள்ள சூழ்நிலைக்கேற்ப இருதரப்பு அல்லது முத்தரப்பு ஒப்பந்தத்தின் கீழ் அல்லாமல் வீட்டுப் பணீயாளரைப் பணியமர்த்துவதற்கு அனுமதி இல்லை.

الهيئة العامة للقوى العاملة
Public Authority of Manpower

MANPOWERKWT

# அன்புள்ள பணியமர்த்துபவரே

2015 இன் 68 ஆம் எண் வீட்டுப் பணியாளர் சட்டம் ஆர்ட்டிகிள் 17 இல் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் சந்தர்ப்பங்களில் பணியமர்த்தல் அலுவலகம் / நிறுவனத்திலிருந்து பணியாளரைப் பெற்ற ஆறு மாதங்களுக்குள் அலுவலகம் / நிறுவனத்தால் வசூலிக்கப்பட்ட தொகையைத் திரும்பப் பெற உங்களுக்கு உரிமை உண்டு:

الهيئة العامة للقوى العاملة
Public Authority of Manpower

MANPOWERKWT

# அன்புள்ள பணியமர்த்துபவரே

- வீட்டுப் பணியாளர் தன் வேலையைச் செய்வதில் ஏதேனும் சட்டரீதியான தடை இருந்து, பணியமர்த்துபவருக்கு அதில் எந்தக் கட்டுப்படுத்தும் உரிமையும் இல்லையென்றால் 2(015 இன் 68 ஆம் எண் வீட்டுப் பணியாளர் சட்டம் ஆர்ட்டிகிள் 17 இன் முதல் பாரா.)
- வீட்டுப் பணியாளர் அவர் வேலையைத் தொடர்ந்து செய்வதைத் தடுக்கும் ஏதேனும் தொற்றுநோயாலோ, உடல்ரிதியான, ஆரோக்கியம் தொடர்பான அல்லது மனரீதியான குறைபாட்டாலோ பாதிக்கப்பட்டிருந்தால் 2015 இன் 68 ஆம் எண் வீட்டுப் பணியாளர் சட்டம் ஆர்ட்டிகிள் 17 இன் பாரா 2).

# அன்புள்ள பணியமர்த்துபவரே

- வீட்டுப் பணியாளருக்கு வசிக்கும் பர்மிட் வழங்குவதைத் தடை செய்யும் பொதுநல அக்கறையால் விதிக்கப்பட்ட சட்ட விதி ஏதேனும் இருந்தால் (2015 இன் 68 ஆம் எண் வீட்டுப் பணியாளர் சட்டம் ஆர்ட்டிகிள் 17 இன் பாரா 3).
- பொதுநல நன்மையை முன்னிட்டு, வீட்டுப் பணியாளர் நிர்வாக அடிப்படையில் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டால் (2015 இன் 68 ஆம் எண் வீட்டுப் பணியாளர் சட்டம் ஆர்ட்டிகிள் 17 இன் பாரா 4)

# அன்புள்ள பணியமர்த்துபவரே

- வீட்டுப் பணியாளர் பணியமர்த்தல் அலுவலகம் அல்லது நிறுவனம் வீட்டுப் பணியாளர் பற்றி உங்களுக்குத் தவறான தரவோ, தகவலோ அளித்தால் (2015 இன் 68 ஆம் எண் வீட்டுப் பணியாளர் சட்டம் ஆர்ட்டிகிள் 17 இன் பாரா 5).

- வீட்டுப் பணியாளர் தொடர்ந்து பணி செய்ய மறுத்தால் அல்லது வேலையை விட்டு விட்டுத் தெரியாத ஒரு நபரிடம் சென்று விட்டால் (2015 இன் 68 ஆம் எண் வீட்டுப் பணியாளர் சட்டம் ஆர்ட்டிகிள் 17 இன் பாரா 6).

الهيئة العامة للقوى العاملة
Public Authority of Manpower

MANPOWERKWT


அன்புள்ள
பணியமர்த்துபவரே
வீட்டுப் பணியாளருக்கு வசிப்பதற்குப் போதுமான வசதிகளுடன் போதுமான வீட்டு வசதி செய்து தர வேண்டியது உங்கள் கடமை (2015 இன் 68 ஆம் எண் வீட்டுப் பணியாளர் சட்டம் ஆர்ட்டிகிள் 11).
الهيئة العامة للقوى العاملة
Public Authority of Manpower
MANPOWERKWT

# அன்புள்ள பணியமர்த்துபவரே

2015 இன் 68 ஆம் எண் வீட்டுப் பணியாளர் சட்டம் ஆர்ட்டிகிள் 9, மற்றும் மாதிரி பணியமர்த்தல் ஒப்பந்தம் பாரா 2 இன் ஐந்தாவது விதி (பணியமர்த்துபவரின் கடமைகள்) இவற்றுக்கு இசைந்த விதத்தில், வீட்டுப் பணியாளருக்கு ஒரு பொருத்தமான வாழ்க்கை நிலைக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் அவருக்கு உணவு, உடைகள் வழங்குவதும், சிகிச்சை, நர்சிங் மற்றும் 1999 இன் சட்டம் 1 இல் விதிக்கப்பட்டுள்ள ஆரோக்ய இன்ஷ்யூரன்சில் பதிவு செய்தல் ஆகியவற்றைப் பின்பற்றி நடக்க வேண்டியதும் உங்கள் கடமை.

الهيئة العامة للقوى العاملة
Public Authority of Manpower

MANPOWERKWT

# அன்புள்ள பணியமர்த்துபவரே

வீட்டுப் பணியாளரின் சம்பளம் உங்களிடம் அவர் வேலைக்குச் சேர்ந்த முதல் நாளிலிருந்து கிரிகாரிய மாதத்தின் இறுதி நாள் வரை, வீட்டுப் பணியாளர் கையொப்பமிட்ட ரசீதின்படி அமைச்சரின் முடிவின்படி விதிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியத்துக்குக் குறையாததாக வழங்கப்பட வேண்டும். அவருடைய சம்பளத்துக்கான பணமாற்று ரசீது, 2015 இன் 68 ஆம் எண் வீட்டுப் பணியாளர் சட்டம் ஆர்ட்டிகிள் 7 மற்றும் மாதிரி பணியமர்த்தல் ஒப்பந்தம் பாரா4 (பணியமர்த்துபவரின் கடமைகள்) ஐந்தாவது பகுதியின்படி பணம் பெற்றதற்கான சான்றாகக் கருதப்படும்.

الهيئة العامة للقوى العاملة
Public Authority of Manpower

MANPOWERKWT

# அன்புள்ள பணியமர்த்துபவரே

வேலை செய்யும்போதோ அல்லது வேலையின் காரணமாகவோ வீட்டுப் பணியாளருக்கு ஏற்படும் காயங்களுக்கு குவைத் சிவில் கோட், ஆர்ட்டிகிள் 7இன் விதிகள், 2015 இன் 68 ஆம் எண் வீட்டுப் பணியாளர் சட்டம் ஆர்ட்டிகிள் 22 பாரா 1 மற்றும் மாதிரி பணியமர்த்தல் ஒப்பந்தம் பாரா4 (பணியமர்த்துபவரின் கடமைகள்) ஐந்தாவது பகுதி இவற்றின்படி அவருக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும்.

الهيئـة العامـة للقـوى العاملـة
Public Authority of Manpower

MANPOWERKWT

# அன்புள்ள பணியமர்த்துபவரே

வீட்டுப் பணியாளருக்கான மாதச் சம்பளம்P அவர் உங்களுக்கு வேலைக்குக் கிடைத்த  தினத்திலிருந்து வழங்கப்பட வேண்டும். 2015 இன் 68 ஆம் எண் வீட்டுப் பணியாளர் சட்டம் ஆர்ட்டிகிள்  8 இன்படி சம்பளத்தின் எந்தப் பகுதியிலிருந்தும் எந்த வகையிலும் பிடித்தம் செய்வதற்கு அனுமதி இல்லை.